**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.174** **நாள் : 14.07.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கான கணக்கெடுப்புப் பணியினை தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள 9 மண்டலங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான கணக்கெடுப்புப் பணியினை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் இன்று (14.07.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான கணக்கெடுப்புப் பணி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க.நகர், கோடம்பாக்கம், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 6 மண்டலங்களில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, வளசரவாக்கம், ஆலந்தூர் மற்றும் அடையாறு ஆகிய 9 மண்டலங்களில் கணக்கெடுக்கும் பணி இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. டார்கஸ் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் இந்தக் கணக்கெடுப்பு, CBR வழிகாட்டி கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி, வீடுகள்தோறும் நேரில் சென்று மாற்றுத்திறனாளிகளை அடையாளம் காண்பதற்காக மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு மாற்றுத்திறனாளியும் புறக்கணிக்கப்படக் கூடாது. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் மற்றும் நலன்கள் சமமாக கிடைக்கப் பெற வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, மாற்றுத்திறனாளிகளுக்கான அரசின் திட்டங்கள், சிகிச்சைகள், மறுவாழ்வு சேவைகள் மற்றும் ஆலோசனை ஆதரவுகளைப் பெற்றிடும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்காக தமிழ்நாடு அரசு கொண்டு வருகிற முக்கியத்துவமிக்க திட்டங்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வு அடையவும், இத்திட்டத்தில் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரிக்கவும் வழிவகுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பு பணியானது 14.07.2025 முதல் செப்டம்பர் 2025 இறுதிவரை நடைபெறவுள்ளது. இப்பணிகளுக்காக சுமார 70 சமூக வழிநடத்துநர்கள் மற்றும் சமூக மறுவாழ்வு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கையடக்கக் கணினியின் வாயிலாக தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் செயலியில் முதற்கட்டமாக மாற்றுத்திறனாளிகளை கணக்கெடுக்கும் பணியினை மேற்கொள்வார்கள். இதனைத் தொடர்ந்து, அவர்களுக்கான தேவைகளைக் கண்டறிந்து வழங்கப்படும் சேவைகளை பதிவு செய்யும் பணியினை மேற்கொள்வார்கள்.

**மாண்புமிகு மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காக பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்கள் அவர்களுக்கு முழுமையாக சென்றடைய வேண்டும் என்பதற்காக மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்புப் பணி தற்போது தொடங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-109க்குட்பட்ட எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாலையில் மாற்றுத்திறனாளிகளுக்கான தங்கும் விடுதி மற்றும் உடற்பயிற்சிக் கூடம் திறந்து வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்புப் பணியானது, ஏற்கனவே ஆறு மண்டலங்களில் தொடங்கப்பட்டுள்ளது. தற்போது 9 மண்டலங்களில் இந்தக் கணக்கெடுப்புப் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் நிலை, அவர்களின் இருப்பிடம், அவர்களுக்குத் தேவைப்படும் நலத்திட்ட உதவிகள், வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட கணக்கெடுப்புப் பணி நடைபெறுகிறது.

இந்தக் கணக்கெடுப்புப் பணியினை மேற்கொள்ள சமூக வழிநடத்துநர்கள் மற்றும் சமூக மறுவாழ்வு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்கெடுப்புப் பணியினை மேற்கொள்பவர்கள் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் திரு.எஸ்.குமார் (சென்னை (தெற்கு)), திரு.ஆர்.பாலாஜி (சென்னை (வடக்கு)), டார்கஸ் ஆராய்ச்சி மைய இயக்குநர் டாக்டர் ஐஸ்வர்யா ராவ், தமிழ்நாடு உரிமைகள் திட்ட மாநில மேலாளர் திரு.சங்கர் சகாயராஜ், சமூக வழிநடத்துநர்கள் மற்றும் சமூக மறுவாழ்வுப் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**